முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

சாட்சியின் சான்றுரை - PW3

OS.No. 102/2017

பெயர்:திரு/திருமதி : ராஜாராம் நாள். 11.03.2021

**சாட்சி அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வேலுகவுண்டருக்கு 4 மகன்கள். வேலுகவுண்டர் மகன் பக்தவச்சலம் இறந்து விட்டார். பக்தவச்சலத்தின் மனைவி வள்ளியம்மை 3ம் வாதி. 3ம் வாதி எனக்கு இரத்த சம்பந்தமான உறவு இல்லை. 1984ல் வேலுகவுண்டர் மகன்கள் தாவா சொத்துக்களை பிரித்து தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள். தலா 1½ ஏக்கர் ஆக பிரித்து அனுபவித்து வருகிறார்கள். அதற்கான வருவாய் துறை ஆவணங்களை அவர்களின் பெயருக்கு மாற்றி அவரவர் பாகத்தில் அதற்குண்டான தனித்தனியே வரியும் செலுத்தி வருகிறார்கள். உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வள்ளியம்மை அப்பா வழியில் நீங்கள் சொந்தக்காரர் என்றால் இல்லை.

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1984ல் செல்வராஜ், பக்தவச்சலம், வெங்கடாசலம், பரந்தாமன் ஆகியோர்களிடையே வாய்மொழியாக பாகம் பிரித்து அனுபவித்து வருகிறார்கள். மேற்சொன்ன 4 பேரும் வாய்மொழியாக பாகம் பிரித்து அனுபவித்து வருவது வேலுகவுண்டரின் மற்ற பெண் வாரிசுகளான செல்லம்மாள் வாரிசுதாரர்களும் ஆண்டாள் வாரிசுதாரர்களும் ஜெயலட்சுமி அபரஞ்சிதம் ஆகியோர்களுக்கு தெரியும். அதேபோல் மேற்சொன்ன 4 பேரும் தனித்தனியாக 1984 லிருந்து வாழ்ந்து வருகிறார்கள். 1ம் பிரதிவாதி

செல்வராஜ் அவரின் பெயரில் வாங்கிய சொத்துக்கள் பற்றி விபரம் எதுவும் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி செல்வராஜ் கார்த்திகேயன், புகழேந்தி, செந்தில்குமார் ஆகியோர்களுக்கு சொத்து கிரையம் செய்த விபரம் எனக்கு தெரியாது. ஜெயசங்கர் என்பவர் கார்த்திகேயன், புகழேந்தி, செந்தில்குமார் ஆகியோர்களிடமிருந்து சொத்து கிரையம் வாங்கினார். வழக்கின் சொத்துக்கான பட்டா பரந்தாமன், வெங்கடாசலம், பக்தவச்சலம் ஆகியோரின் பெயரில் உள்ளது. இன்று நாள் வரை நான் ஜெயசங்கர் வாங்கிய கிரையப் பத்திரங்களை நான் பார்க்கவில்லை. வாதிகள் எனக்கு உறவினர் இல்லை. ஜெயசங்கர் என்பவர் கார்த்திகேயன், புகழேந்தி, செந்தில்குமார் ஆகியோர்களிடமிருந்து சொத்துக்களை கிரையம் வாங்கி பட்டா மாறுதல் செய்து சொத்துக்களை அனுபவிக்கும் விபரங்கள் உங்களுக்கு தெரியும் என்றால் நிலம் அவரவர்கள் பயிர் வைக்கிறார்கள் அதுதான் எனக்கு தெரியும். இந்த வழக்கு சொத்துக்கள் தொடர்பான சிட்டா அடங்கல், பட்டா ஆகியவைகளை நான் இதுநாள் வரை பார்த்தது இல்லை. வாதிகள் வேண்டப்பட்டவர்கள் என்பதால் நீங்கள் பொய்யாக சாடசியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.